CNR.No.TNTU07-000672-2021

சார்பு நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்

**முன்னிலை: B. ராஜா, பி.ஏ., பி.எல்.,**

சார்பு நீதிபதி, வாணியம்பாடி.

2026 -ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ஆம் நாள் வியாழக்கிழமை

(2058 திருவள்ளுவர் ஆண்டு, ஸ்ரீ பராபவ வருடம் சித்திரை திங்கள் 03ம் நாள்)

**அசல் வழக்கு எண். 258/2021**

முருகன், த/பெ.மாணிக்கம், வயது சுமார் 37,
இருப்பிடம் கதவு எண்.189, பெருமாபட்டு கிராமம்,
வாணியம்பாடி வட்டம், திருப்பத்தூர் மாவட்டம். ... வாதி

/எதிர்/

ஆனந்தி, க/பெ.ஏழுமலை, வயது சுமார் 35,
இருப்பிடம் ஆலாங்காயம் மெயின் ரோடு, திருமதி வணிக வளாகம்,
குருசிலாப்பட்டு கிராமம், சப்தகிரி நகர், திருப்பத்தூர் வட்டம்,
திருப்பத்தூர் மாவட்டம். ... பிரதிவாதி

| | |
|---|---|
| வழக்கு தாக்கல் செய்த நாள் | : 11.11.2021, 17.11.2021. |
| வழக்கு கோப்பிற்கு எடுத்த நாள் | : 17.11.2021. |
| சொத்து மதிப்பு | : ரூ.1,12,500/- |
| நீதிமன்ற கட்டணம் செலுத்தும் தொகை | : ரூ.3,375/- U/s.42, 27(c), 22 TNCF Act. |
| வழக்கிற்கான வழக்கு மூலங்கள் | : 20.11.2020, 18.10.2021, 20.10.2021 இடம் கொத்தகோட்டை மதுரா, நத்தம் கிராமம், வாணியம்பாடி வட்டம், திருப்பத்தூர் மாவட்டம். |

தாவா விற்கிரைய உடன்படிக்கையின் படி, மீதி கிரையத்தொகை ரூ.10,000/–ஐ வாதியிடமிருந்து பெற்றுக்கொண்டு, தாவா சொத்து குறித்து, வாதியின் பெயருக்கு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் ஒன்றை பிரதிவாதி எழுதிக் கொடுக்கவேண்டுமென்றும், தவறும் பட்சத்தில், தாவா சொத்து குறித்து வாதியின் பெயருக்கு நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் எழுதிக்கொடுக்க வேண்டுமென்ற ஏற்றதை ஆற்றுக பரிகாரத்திற்காகவும், அல்லது மாற்றுமுறை பரிகாரமாக தாவா விற்கிரைய உடன்படிக்கை ஆவணத்தில் கண்டுள்ள முன்பணம் ரூ.1,00,000/–ஐ பின்வட்டியுடன் வாதிக்கு, பிரதிவாதி கொடுக்க வேண்டும் என்றும், தாவா சொத்தை பிரதிவாதி எந்தவொரு வில்லங்கமும் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும், வாதியால் அசல் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கானது இறுதியாக, கடந்த 26.03.2026ம் தேதியில், இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு எம்.சிவா, அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தோன்றாதரப்பினர் நிலையில் வைக்கப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த வந்த வழக்குக் கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் கவனமாகப் பரிசீலனை செய்து, வாதி தரப்பு வாதங்களைக் கேட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்பாணை</u>

1. தாவா பகுதியாக அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.
2. தாவாவில் வாதி முன்வைத்துள்ள ஏற்றதை ஆற்றுக பரிகாரம் எதுவும் வாதி பெற முடியாது என்றும், மாற்றுமுறை பரிகாரமாக தாவா விற்கிரைய உடன்படிக்கை ஆவணத்தில் கண்டுள்ள கிரைய

முன்பணம் ரூ.1,00,000/-ஐ விற்கிரைய உடன்படிக்கை ஆவண தேதியில் இருந்து தாவா தாக்கல் செய்துள்ள தேதி வரை 12% வட்டியுடனும், தாவா தாக்கல் செய்துள்ள தேதியிலிருந்து தீர்ப்பு தேதி வரை 9% வட்டியுடனும், தீர்ப்பிற்கு பின் முழுத் தொகை வசூலாகும் வரை 6% வட்டியுடனும், பிரதிவாதி கொடுக்க வேண்டுமென்றும், உத்தரவிடப்படுகிறது.

3. தாவாவில் வாதிக்கு ஏற்பட்டுள்ள செலவினங்கள் அனைத்தையும் பிரதிவாதி கொடுக்க வேண்டுமென்றும், அதனை திருப்பி செலுத்தும் வரையில், தாவா சொத்தை பிரதிவாதி எந்தவொரு உரிமை மாற்றமும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், உத்தரவிடப்படுகிறது.

## COST MEMO DETAILS

| S.No | Description | Plaintiff Side not filed |
|---|---|---|
| 1) | Stamp for plaint | 3,375.00 |
| 2) | Stamp for power | 10.00 |
| 3) | Pleader's Fees | - |
| 4) | Services of Process | - |
| 5) | Preparation of Process | - |
| 6) | Cost of marking or getting copies of pleadings, applications & affidavits | - |
| 7) | Total Rs | 3,385.00 |

## சொத்து விவரம்

திருப்பத்தூர் மாவட்டம், வேலூர் பதிவு மாவட்டம், வாணியம்பாடி வட்டம், கொத்தக்கோட்டை கிராமத்தில் மேற்படி கிராம நத்தம் சர்வே எண்.560 க்கு சம்மந்தப்பட்ட கிராம நத்தம் சர்வே எண்.74-க்கு தற்போதைய புதிய

உட்பிரிவின்படி சர்வே எண்.430/35 இதில் 70 ச.மீ. (அ) 753 சதுரடி விஸ்தீரணமுள்ள காலிமனைக்கு செக்குபந்தி விவரம்:–

செல்வம் மனைக்கு கிழக்கு, வீதிக்கு மேற்கு, வசந்தா (I), ஆறுமுகம் (2)இவர்களின் மனைக்கு வடக்கு, குமரேசன் இடத்துக்கு தெற்கு, இதன் மத்தியில் கீழ்மேல் வடபுறம் 12.8 மீட்டர், தென்புறம் 12.6 மீட்டர், தென்வடல் கிழக்குபுறம் 5.6 மீட்டர், மேற்குபுறம் 5.4 மீட்டர் ஆக இந்த 753 சதுரடிக்கு 70 சதுர மீட்டர் விஸ்தீரணம் கொண்ட காலிமனை பூராவும். மேற்படி மனைக்கு போகவும், வரவும் உள்ள மாமூல் பொது வழி பாத்தியம் உள்பட ஆக மேற்கண்ட சொத்துக்கள் பூராவும்.

இந்த தீர்ப்பாணையானது என்னால் சரிபார்க்கபட்டு இன்று 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ம் நாள் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் பெறப்பட்டது.

Sd/B.Raja, B.A., B.L.,
சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.

<u>வாணியம்பாடி சார்பு நீதிமன்றம், திருப்பத்தூர் மாவட்டம்</u>
<u>அ.வ.எண்.258/2021</u>

M.முருகன். ... வாதி

//எதிர்//

ஆனந்தி. ... பிரதிவாதி

<u>வாதி சார்பாக தாக்கல் செய்யும் தாவா அசல் விவரம்</u>

| | | |
|---|---|---|
| 1. வழக்கின் தன்மை | – | கிரைய உடன்படிக்கைபடி கிரயம் கோரியும், சுவாதீனம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை கோரியும். |
| 2. பிரிவு மற்றும் உட்பிரிவு | – | 42 |
| 3. வழக்கு சொத்தின் மதிப்பு | – | ரூ.1,10,000/– |
| 4. செலுத்தியுள்ள நீதிமன்றகட்டணம் பிரிவு 42 த.நீ.ம.க.சட்டம்படி | – | ரூ. 3,300/– |
| 5. நிரந்தர உறுத்துக்கட்டளைக்கான வழக்கு மதிப்பு | – | ரூ. 1,000/– |
| 6. செலுத்தியுள்ள நீதிமன்றகட்டணம் பிரிவு 27(சி) த.நீ.ம.க.சட்டம்படி | – | ரூ. 30/– |
| 7. ஆக மொத்தம் வழக்கு மதிப்பு | – | ரூ. 1,11,000/– |
| 8. ஆக மொத்தம் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் பிரிவு 42, 27(சி) த.நீ.ம.க.சட்டம்படி | – | ரூ. 3,330/– |

<u>மாற்று பரிகாரம் மதிப்பு</u>

| | | |
|---|---|---|
| 11. ஆக மொத்தம் | – | ரூ.1,00,000/– |
| 12. செலுத்தியுள்ள நீதிமன்றகட்டணம் பிரிவு 22 த.நீ.ம.க.சட்டம்படி | – | ரூ. 11,500/– |
| 13. நிரந்தர உறுத்துக்கட்டளைக்கான வழக்கு மதிப்பு | – | ரூ. 1,000/– |

14. செலுத்தியுள்ள நீதிமன்றகட்டணம்
பிரிவு 27(சி) த.நீ.ம.க.சட்டம்படி – ரூ. 30/-

15. வழக்கு மொத்த மதிப்பு – ரூ. 1,12,500/-

16. செலுத்தியுள்ள மொத்த நீதிமன்ற
கட்டணம் – ரூ. 3,375/-

Sd/xxxx
வாதியின் வழக்கறிஞர்

Sd/xxxx
வாதி

//உத்தரவுபடி//
Sd/xxx

சிரஸ்தாரர்
சார்பு நீதிமன்றம், வாணியம்பாடி.